களம் காணும் கழகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

ஈரோடு, கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

மாபெரும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்!

தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (மார்ச் 31ஆம் தேதி) திருவாரூரில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்கினார். தொடர்ந்து இன்று ஈரோடு, கோவையில் பரப்புரையை மேற்கொள்கிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
02.04.2026 (வியாழக்கிழமை)		
காலை 9 மணி	**ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்)	பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி
மாலை 5 மணி	**கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்)	சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

தலைமைக் கழகம்,
தி.மு.க.

ஆத்தூர் தொகுதிக்கு வைகைத் தண்ணீர் விரைவில் கிடைக்கும் என்று பிள்ளையார்நத்தத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு, ஆத்தூர் தொகுதிக்கு கேட்டவுடன் அரசுக் கலைக் கல்லூரிகள் இரண்டு, டைடல்பார்க், தொழிலாளர் நல மருத்துவமனை வழங்கியவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பொதுமக்கள் மத்தியில் பேசினார். அருகில் ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தேனி மாவட்டம் அ.தி.மு.க. முன்னாள் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.முருகேசன் தலைமையில் ராஜகோபாலன் அம்பை, வசந்தன், ஜோதிகுருசாமி, ஈஸ்வரன், சீனிவாசன். ஜெயராம், ஆண்டவர், ராமர், விஜயராஜன் ஆகியோர் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய செயலாளர் ரத்ன சபாபதி, பிசி பட்டி பேரூராட்சி தலைவர் மிதுன் சக்கரவர்த்தி மற்றும் கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர்நெற்குப்பை பேரூர், வடக்கு, தெற்கு ஒன்றிய அளவிலான மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பத்தூரில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் எஸ்.சண்முகவடிவேல், பொருளாளர் ஏ.எம்.கண்ணன், அணி அமைப்பாளர்கள் எஸ்.எஸ்.ஏ.வல்ல பாய், கே.எஸ்.நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை ஊராட்சி பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் சரிதா தலைமையில் 100 க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டச் செயலாளர், மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில உணவு வாரிய தலைவர் என்.சுரேஷ்ராஜன், கழக துணை அமைப்புச் செயலாளர், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எஸ்.ஆஸ்டின், தோவாளை கிழக்கு ஒன்றியச் செயலாளர் த.செல்வன், பொதுக்குழு உறுப்பினர் செ.காதர்ரஹ்மான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.